சுருக்கம்

கைத்தறி மற்றும் துணிநூல் துறை – ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் – ஒரு பயிற்சியாளருக்கு ரூ.2,000/– வீதம் 15,000 பயிற்சியாளர்களுக்கு ரூ.3.00 கோடி நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (இ1) துறை

அரசாணை (நிலை) எண்:220

நாள்: 03.10.2013
விஜய, புரட்டாசி 17
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது:

1) 2013–2014ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை எண்.17–இல் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – அறிவிப்பு எண்.2.

2) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.5111/2011/பி3, நாள் 12.06.2013 மற்றும் 26.07.2013.

*******

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2013–2014ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை எண்.17–ன் போது, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

அறிவிப்பு எண்.2:

## ஆயத்த ஆடை மற்றும் வடிவமைப்பு மையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகை ரூ.2000/– வழங்குதல்:

“ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் ஆயத்த ஆடை மற்றும் வடிவமைப்பு மையங்களில் பெறும் பயிற்சியை ஊக்குவிக்கும் விதமாக வருடத்திற்கு 15,000 இளைஞர்கள் பயன்பெறும் வகையில், ஒரு பயிற்சியாளருக்கு ரூ.2000/– வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.3 கோடியை அரசே ஏற்கும்’’.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவித்த அறிவிப்பினை நிறைவு செய்யும் பொருட்டு பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

ஆயத்த ஆடை உற்பத்தி துறையில் வளர்ந்து வரும் முன்னேற்றத்திற்கும் தொழில் நுட்ப ரீதியிலான வளர்ச்சிக்கும் ஈடுகட்டும் வகையில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு துணிநூல் தொழிலில் திறனை வளர்க்கும் வகையிலும் வேலைவாய்ப்பை

ஏற்படுத்தி தரும் வகையிலும் மத்திய அரசின் ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்கள் (Apparel Training & Design Centre) தமிழ்நாட்டில் தற்பொழுது 17 இடங்களில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையங்களில் 2013–14–ம் நிதியாண்டில் 16 அணிகளாக பிரிக்கப்பட்டு, தினமும் இரண்டு கட்டங்களாக பயிற்சி அளிக்கும் பட்சத்தில் 15,000 பயிற்சியாளர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி பயிற்சி மையங்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன:–

| வ. எண். | பயிற்சியின் பெயர் | பயிற்சி காலம் |
|---|---|---|
| 1. | Smart Quality Checker | 45 நாட்கள் |
| 2. | Smart Operator ( Basic) | |
| 3. | Smart Surface Ornamentation | |
| 4. | Smart Pattern Makers | |
| 5. | Smart Machine Technician | |
| 6. | Smart Finisher ( Basic) | |
| 7. | Smart Operator(Advance) | 15 நாட்கள் |

| | | |
|---|---|---|
| இப்பயிற்சிக்காகும் மொத்த செலவினம் | ரூ. | 10,300/– |
| (இப்பயிற்சிக்கான மொத்த செலவினம் கீழ்க்கண்ட விபரப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது) | | |
| மத்திய அரசின் பங்களிப்பு | ரூ. | 7,300/– |
| ஆயத்த ஆடை வடிவமைப்பு நிலையத்தின் (ATDC) பங்களிப்பு | ரூ. | 1,800/– |
| பயிற்சியாளரின் பங்களிப்பு | ரூ. | 1,200/– |

இந்த பயிற்சியில் தேர்வு பெறும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி காலம் முடிந்தவுடன் ஒரு பயிற்சியாளருக்கு தலா ரூ.2000/–வீதம் ஊக்கத்தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. எனவே மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்களில் பயிற்சி பெற்று தேர்வு பெறும் 15,000 பயிற்சியாளர்களுக்கு தொடர்ந்து ஊக்கத்தொகை வழங்கும் பொருட்டு ஒரு பயிற்சியாளருக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.2,000/ வீதம் வழங்க அரசாணை வழங்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) 2013–14–ம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் நோக்கில் அரசு பரிசீலனை செய்து அதனை ஏற்கலாமென முடிவு செய்தது. ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு (Apparel Training & Design Centre) மையங்களில் 2013–14–ம் நிதியாண்டில் 15,000 இளைஞர்களுக்கு 45 நாட்களுக்கு பயிற்சி பெற்று தேர்வு பெறும் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக தலா ரூ.2000/– வீதம் வழங்கும்

பொருட்டு ரூ.3.00 கோடி (ரூபாய் மூன்று கோடி மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ. 3.00 கோடி கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> 2851–00 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 103 கைத்தறித் தொழில்கள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் – BB ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்களில் பயிலும் இளைஞர்களுக்கு உதவித் தொகை – நிதியுதவி –09. உதவித்தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

(த.தொ.கு.2851 00 103 BB 0932)

5) மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

6) மேலே பத்தி 3ல்–ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி (New Service) குறித்த திட்டமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணைகள் நிதி (வரவு செலவு (பொது–1))த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளுடன் நிதி (வரவு செலவு (பொது–1))த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வரவு – செலவு (பொது–1)) / தொழில்கள்)த் துறைக்கு அனுப்புமாறும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை 2013–2014–ஆம் ஆண்டுக்குள் செலவு செய்து அத்தொகை முறையாக செலவிடப்பட்டது குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண்.52244 / தொழில்கள் / 2013, நாள் 01.10.2013–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1391 (ஆயிரத்து முந்நூற்று தொண்ணூற்றொன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை–108.
*சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு ), சென்னை–1.*

மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை–600 018.
மாநில தலைமை கணக்காயர், (CA), சென்னை–600 018.
மாநில கணக்காயர், (CAS), சென்னை–600 009.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் ( கைத்தறி மற்றும் துணிநூல் ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித் (தொழில்கள்) / வ.செ.பொ.1 /II துறை, சென்னை–600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1)துறை, சென்னை–600 009.
இருப்புக்கோப்பு/சுத்த நகல், உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
3.10.2013